பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
10 02 2026 TUESDAY 12 40 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நாடாளுமன்ற நடவடிக்கைகள், எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக இன்றும் பாதிக்கப்பட்டது. மக்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

- நாடாளுமன்றத்தில், காங்கிரஸ் பெண் உறுப்பினர்களின் நடவடிக்கை கண்டனத்திற்குரியது என்று நாடாளுமன்ற விவகாரங்கள்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.

- வனப்பகுதிகளில் வாழும் மக்கள் விலங்குகளின் நடமாட்டம் குறித்த விழிப்புணர்வை பெறுவதற்கு மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

- இலங்கைக்கு தொடர்ந்து நிதிஉதவி அளித்துவரும் இந்திய அரசுக்கு, அந்நாட்டு பிரதமர் டாக்டர் ஹரினி அமரசூர்யா நன்றி தெரிவித்துள்ளார்.

- புனே சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sahaja Yamalapalli காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி வருகின்றனர்.

மக்களவை தலைவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தி, காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால், அவை நடவடிக்கைகள் முதலில் நண்பகல் 12 மணிவரையும், பின்னர் பிற்பகல் 2 மணிவரையும் ஒத்தி வைக்கப்பட்டது.

மக்களவை இன்று காலை கூடியதும், கேள்வி நேரத்தை தொடங்க முயன்ற போது, எதிர்க்கட்சிகள் அவையின் மையப்பகுதிக்குச் சென்று முழங்கங்களை எழுப்பினர்.

கேள்வி நேரத்தில் அமளி தொடர்ந்ததை அடுத்து, மக்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மக்களவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நடந்து கொள்ளும் முறை தவறானது என்றும், அவையின் மாண்பை குறைக்கும் வகையில் அவர்கள் தொடர்ந்து தேவையற்ற விவகாரங்களை அவையில் எழுப்பி வலியுறுத்தி வருவதாகவும் நாடாளுமன்ற விவகாரங்கள்துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜு கூறினார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த வாரம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெண் உறுப்பினர்கள் பிரதமரின் இருக்கைக்கு அருகே சென்று கோஷங்களை எழுப்பியதாகவும், இது கண்டனத்திற்குரியது என்றும் குற்றம் சாட்டினார்.

இதுதொடர்பாக பிஜேபி பெண் உறுப்பினர்கள், மக்களவைத் தலைவரிடம் புகார் அளித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

சமூகவலைதளங்களில் இந்த சம்பவம் தொடர்பாக காங்கிரஸ் கட்சியினர் மகிழ்ச்சியுடன் தங்களது கருத்துக்களை பதிவிடும் போக்கு, கண்டிக்கத்தக்கது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனநாயக மாண்புகளுக்கு விரோதமாக அவர்கள் செயல்பட்டு வருவதாக திரு.கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டினார்.

>>>>><<<<<

வனப்பகுதிகளில் வாழும் மக்கள் விலங்குகளின் நடமாட்டம் குறித்த விழிப்புணர்வை பெறுவதற்கு மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் எழுத்து மூலம் அளித்த பதிலில் இதனை தெரிவித்த அவர், மனித உயிர்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் வனவிலங்குகள் தொடர்பான முழுவிவரங்கள் அப்பகுதி மக்களுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்றும், அடிக்கடி தாக்குதலில் ஈடுபடும் வனவிலங்குகளை பிடிப்பதற்கு, மாநில வன பாதுகாவலர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

வன விலங்குகளை பாதுகாக்க, அப்பகுதிகளில் தேசியப் பூங்கா, சமூக வன விலங்குகள் பூங்கா போன்றவை அமைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

*யானை, புலி, காட்டுப் பன்றி, முதலை உள்ளிட்ட வன விலங்குகளிடமிருந்து மனிதர்களை பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் திரு. கீர்த்தி வர்தன் சிங் கூறினார்.*

*>>>>><<<<<*

*மகளிர் தொழில் முனைவோருக்கான Swavalambini திட்டம், ஐந்து மாநிலங்களில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய திறன் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி தெரிவித்துள்ளார்.*

*மக்களவையில் எழுத்து மூலம் இதனை தெரிவித்த அவர், தெலங்கானா, உத்தரபிரதேசம், அஸ்ஸாம், மேகாலயா, மிஸோரம் ஆகிய ஐந்து மாநிலங்களைச் சேர்ந்த 6 உயர்கல்வி நிறுவனங்களில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்.*

*இத்திட்டத்தின் மூலம் இளம் பெண்களை தொழில் முனைவோராக்குவதற்கான அனைத்து பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.*

*Swavalamban திட்டத்தின் கீழ், இம்மாநிலங்களில் உள்ள பல்வேறு உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த ஆயிரத்து 200 மாணவிகளுக்கு, திறன் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக திரு. ஜெயந்த் சௌத்ரி கூறினார்.*

*>>>>><<<<<*

*சமுத்திர மந்தன் திட்டத்தின் கீழ், ஹைட்ரோ கார்பன் வளங்களை கண்டறிய மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக மத்திய பெட்ரோலியத்துறை இணையமைச்சர் திரு. சுரேஷ் கோபி கூறியுள்ளார்*

*மாநிலங்களவையில் இதனை தெரிவித்த அவர், மகாநதி மற்றும் காவிரி ஆற்றுப் படுகையில் இதுதொடர்பான ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டதில், ஹைட்ரோகார்பன் கண்டறியப்பட்டுள்ளதாக கூறினார்.*

*தேசிய ஆழ்கடல் திட்டத்தின் கீழ், ஹைட்ரோகார்பன் கண்டறிய சமுத்ர மந்தன் திட்டம் சென்ற ஆண்டு தொடங்கப்பட்டதாக திரு. சுரேஷ் கோபி தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

இந்தியா - அமெரிக்கா உடனான வர்த்தக ஒப்பந்தம், ஜவுளித் துறையின் முன்னேற்றத்திற்கு பயனுள்ளதாக அமையும் என்று அத்துறைக்கான ஏற்றுமதி கவுன்சிலின் தலைவர் டாக்டர் சக்திவேல் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், இந்த ஒப்பந்தம் இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்தில் புரட்சிகரமான மாற்றத்தை கொண்டு வரும் என்று தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - சக்திவேல் 60 செகண்ட்ஸ்)

இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம், தோல் பொருட்கள் ஏற்றுமதிக்கு பயனுள்ளதாக அமையும் என்று தோல் ஏற்றுமதி கவுன்சில் தெரிவித்துள்ளது.

இந்த கவுன்சிலின் மண்டலத் தலைவர் திரு. Asad Iraqi எமது செய்தியாளரிடம் பேசுகையில், ஏற்றுமதி வரியை குறைப்பதன் மூலம், இந்திய தோல் ஏற்றுமதியாளர்களுக்கு பயனளிக்கும் என்று அவர் கூறினார்.

பிரதமர் திரு.நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துக் கொண்ட திரு. Asad Iraqi தோல் துறையின் மேம்பாட்டிற்கு இது வழிவகை செய்யும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>><<<<<

பங்களாதேஷிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரி 19 சதவீதமாக குறைக்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளதாக பங்களாதேஷ் இடைக்கால அரசின் தலைவர் திரு. மொஹமது யூனுஷ் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இதன் மூலம் பங்களாதேஷிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஜவுளி ஆடைகளுக்கு வரி குறைக்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

அஸ்ஸாமில் சிறப்பு திருத்தப் பணிகளுக்குப் பின், இறுதி வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்படுகிறது.

தமிழகம் உள்ளிட்ட 12 மாநிலங்களில் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் நடைபெற்றுள்ள நிலையில். அஸ்ஸாமில் மட்டும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணிகள் நடைபெற்றன.

அஸ்ஸாமில் இந்த சிறப்பு திருத்தப் பணிகளுக்காக 29 ஆயிரத்து 656 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டனர்.

குவஹாத்தியில் செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு. ஹிமந்த பிஸ்வா சர்மா, அஸ்ஸாமில் சட்டப்பேரவை தேர்தலுக்குப் பின்னர், சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் நடைபெறும் என்று கூறினார்.

>>>>><<<<<

இலங்கைக்கு தொடர்ந்து நிதிஉதவி அளித்துவரும் இந்திய அரசுக்கு, இலங்கை பிரதமர் டாக்டர் ஹரினி அமரசூர்யா நன்றி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், மகாத்மா காந்தியின் போதனைகள் மாணவர்களுக்கு ஊக்கமளிப்பதாக உள்ளதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் 300 மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகையை அவர் வழங்கினார்.

இந்திய நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் மகாத்மா காந்தி கல்வி ஊக்கத்தொகை திட்டத்தின் கீழ், மாதந்தோறும் 2 ஆயிரத்து 500 இலங்கை ரூபாய் வழங்கப்படுவதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய இலங்கைக்கான இந்திய தூதர் டாக்டர் Satyanjan Pandey, இந்தியா அளிக்கும் இந்த நிதியுதவியை பெறும் மாணவர்கள் காந்தியடிகளின் போதனைகளின் அடிப்படையில் ஊக்கத்துடன் முன்னேற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் இலங்கை கல்வித்துறை இணையமைச்சர் டாக்டர் Madhura Senevirathna உள்ளிட்டோர் கலந்து கொண்டார்.

>>>>><<<<<

கியூபாவில் நிலவும் விமான எரிபொருள் தட்டுப்பாட்டை அடுத்து, அந்நாட்டிற்கான பல்வேறு விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

வெனிசுலாவிலிருந்து கியூபாவுக்கான, பெட்ரோலியம் மற்றும் விமான எரிபொருள் ஏற்றுமதியை அமெரிக்கா தடை செய்ததை அடுத்து, அங்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

ஏர் கனடா, வெஸ்ட் ஜெட், Air Transat உள்ளிட்ட பல்வேறு விமான நிறுவனங்கள், கியூபாவிற்கான விமான சேவைகளை ரத்து செய்வதாக அறிவித்துள்ளன.

இந்நிலையில், கியூபாவிற்கு சென்றுள்ள கனடா நாட்டைச் சேர்ந்த சுற்றுலா பயணிகளை தாய்நாட்டிற்கு திருப்பி அழைக்க, ஏர் கனடா நிறுவனம் சிறப்பு விமானங்களை இயக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

*புனேயில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sahaja Yamalapalli காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-4, 7-6 என்ற செட்கணக்கில் ரஷ்யாவின் Ekaterina-வை வென்றார்.*

>>>>><<<<<